"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2019

## தமிழ்மொழி ஆண்டு 11

**நேரம்: 150 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

## பகுதி - 1

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3

1. திருக்குறளின் ஒன்பதாவது அதிகாரத்தில் கூறப்பெறுவது
   1. ஒழுக்கமுடைமையின் சிறப்பு
   2. விருந்தோம்பலின் சிறப்பு
   3. இல்வாழ்க்கையின் சிறப்பு

2. தமிழ்மொழியிலுள்ள உயிர்மெய்க் குற்றெழுத்துகளின் எண்ணிக்கை
   1. நூற்றிருபத்தாறு
   2. தொண்ணூறு
   3. இருநூற்றுப்பதினாறு

3. 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே'
   இதில் தொழிற்பெயராக அமையும் சொல்
   1. கற்கை
   2. நன்று
   3. பிச்சை

4. 'நற்சபையில் கைகொடுத்தல் சாலவும் முன் இனிதே' இதில் வந்துள்ள உரிச்சொல்
   1. நற்
   2. முன்
   3. சால

5. 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் புகழப்பெற்றவர்
   1. வள்ளலார்
   2. ஆறுமுகநாவலர்
   3. ஞானப்பிரகாசர்

6. மாணவர்க்குரியது நல்லொழுக்கம். இதில் நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்
   1. முறை
   2. தகுதி
   3. நட்பு

7. ஒருவர் தனது அறுபதாவது பிறந்தநாளைக் கொண்டாடும் விழா
   1. பொன்விழா
   2. மணிவிழா
   3. வெள்ளிவிழா

8. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் குறள்வெண்பா வகையைச் சார்ந்த நூல்
   1. நாலடியார்
   2. திருக்குறள்
   3. முதுமொழிக்காஞ்சி

9. திறன் அறிந்து தீதின்றி வந்தபொருள். இதில் தீது என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. நன்று
   2. தீமை
   3. சிறப்பு

10. வயலும் வயல் சார்ந்த நிலத்தைக் குறிப்பது
    1. குறிஞ்சி
    2. முல்லை
    3. மருதம்

1 2 3

11. அகப்புணர்ச்சி இடம்பெற்று வந்துள்ள சொல்
    1. நீரோடை
    2. படிக்கிறான்
    3 ஆடுகளம்

12. செம்மொழித் தமிழின் காப்பியங்களாக விளங்குபவை
    1. மகாபாரதம், இராமாயணம்
    2. சிலப்பதிகாரம், மணிமேகலை
    3. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு

13. உயிர்முன் உயிர் புணரும் போது தோன்றும் உடன்படுமெய் எழுத்துகள்
    1. ய் வ்
    2. வ் ப்
    3. ப் ய்

14. விளிவேற்றுமை ஏற்காத பெயர்ச்சொல்
    1. தம்பி
    2. தாய்
    3. நீ

15. நிலைமொழிஈற்று மெய் இரட்டித்துப் புணர்ந்த சொல்
    1. நன்னூல்
    2. பண்ணிசை
    3. தண்ணீர்

16. தமிழில் தட்டச்சு செய்யும்போது சொற்பிழை, சந்திப்பிழை ஆகிய இரண்டையும் ஒரே நேரத்தில் கண்டறியும் மென்பொருள்
    1. மென்தமிழ்
    2. விசைத்தமிழ்
    3. ஒளியெழுத்துணரி

17. வழுவான சொல் இடம்பெற்ற வாக்கியம்
    1. சமூகங்களுக்கிடையில் ஒற்றுமை இருத்தல் வேண்டும்.
    2. விழாவிற்கு தவறாது சமூகமளிக்க வேண்டும்.
    3. அவர் கூட்டத்திற்கு சமுகமளிக்கவில்லை.

18. தமிழ்எழுத்துகள் தோன்றக் காரணமாக இருந்தவை
    1. பிராமி எழுத்துகள்
    2. சமஸ்கிருத எழுத்துகள்
    3. சீன எழுத்துகள்

19. அவன் நன்றாகப் படிக்கவில்லை. அவன் சித்தியடைந்தான். இவ்விரு வாக்கியங்களை இணைக்கப் பொருத்தமான இணைப்பிடைச்சொல்
    1. எனினும்
    2. ஆகவே
    3. ஏனென்றால்

20. ‘செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்’ இதில் பரி என்பது
    1. யானை
    2. குதிரை
    3. மான்

**1 2 3**

21. இன்று தேர்வுப் பெறுபேறுகள் வெளிவருமோ. இதில் வந்துள்ள ஓகார இடைச்சொல் தரும்பொருள்
    1. வினா
    2. ஐயம்
    3. எதிர்மறை

22. தமிழ்ப்பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி மற்றும் கலை முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வளர்க்கிறார்கள். இதில் ஆக்கமும் ஊக்கமும் என்பது
    1. இணைமொழி
    2. அடுக்குமொழி
    3. இரட்டைக்கிளவி

23. உற்சாகமூட்டல் என்னும் பொருள்தரும் மரபுத்தொடர்
    1. தட்டிப்பேசுதல்
    2. தட்டிப்பார்த்தல்
    3. தட்டிக்கொடுத்தல்

24. பெருங்கற்காலப் பண்பாடு வையகத்தில் பல நாடுகளில் காணப்படுகிறது. இதில் வையகம்
    1. பார்
    2. விண்மீன்
    3. கோள்

25. ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய ஒன்றைப் பெற முயற்சி செய்யவேண்டும். என்பதை உணர்த்தும் பழமொழி
    1. இந்தப்பூனை பால் குடிக்குமா?
    2. பழகப் பழகப் பாலும் புளிக்கும்
    3. அழுத பிள்ளை பால் குடிக்கும்

(25×1=25 புள்ளிகள்)

## 2. சேர்த்தெழுதுக.

1. நான்கு + ஆயிரம் = ____________________
2. காடு + அரண் = ____________________
3. சொல் + நயம் = ____________________

(3×½=1½ புள்ளிகள்)

## 3. பிரித்தெழுதுக.

1. கருங்கடல் = ______________ + ______________
2. திறனாய்வு = ______________ + ______________
3. மூவேந்தர் = ______________ + ______________

(3×½=1½ புள்ளிகள்)

**4. விருந்தோம்பல் எனும் அதிகாரத்தின் மூலம் திருவள்ளுவர் மக்களுக்கு எவற்றை எடுத்துக்கூறுகிறார்?**

(4 புள்ளிகள்)

**5. சிறுகுறிப்பு எழுதுக.**

1. உலகமயமாதல்

2. புதுக்கவிதை



(2x2=4புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பல்லவர், பாண்டிய காலத்தில் தோற்றம் பெற்ற பக்தி இலக்கியங்கள் எவை? அவற்றினை அருளிச் செய்தவர்கள் யாவர்? (1 புள்ளி)

2. கலைச்சொல் ஆக்கத்திற்கான தேவை ஏன் ஏற்படுகிறது? (1 புள்ளி)

3. சீரொழுகு சான்றோரின் சினம் எத்தகையது என ஔவையார் கூறுகின்றார்? (1 புள்ளி)

4. செய்யுள் உறுப்புகள் எவை? (1 புள்ளி)

5. தன்வினை, பிறவினை வாக்கியங்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (1 புள்ளி)

6. வேற்றுமை என்றால் என்ன? மூன்றாம் வேற்றுமையின் உருபுகளையும் பொருள்களையும் எடுத்துக்காட்டுடன் தருக. (2 புள்ளிகள்)

7. குற்றியலுகர வகைகளை எடுத்துக்காட்டுடன் தருக. (2 புள்ளிகள்)

**7. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

சின்ன மூக்குத் திருகொடு தொங்கும்
பொன்னாற் செய்த பொடிமுத் தைப்போல்
துளியொளி விளக்கின் தூண்டுகோலைச்
செங்காந் தள்நிகர் மங்கை விரலால்
பெரிது செய்து விரிமலர்க் கையில்
ஏந்தி அன்னம் வாய்ந்த நடையொடு
முல்லை அரும்பு முத்தாய்ப் பிறக்கும்
கொல்லை யடைந்து குளிர்புதுப் புனலை
மொண்டாள்; மொண்டு முகத்தைத் துலக்கி
உண்டநீர் முத்தாய் உதிர்த்துப் பின்னும்
சேந்துநீர் செங்கை ஏந்தித் தெருக்கதவு
சார்ந்ததாழ் திறந்து தகடுபோற் குறடு
கூட்டி மெருகு தீட்டிக் கழுவி
அரிசிமாக் கோலம் அமைத்தனள்; அவளுக்குப்
பரிசில் நீட்டினான் பகலவன் - பொன்னொளி

1. இப்பாடலைப் பாடியவர் யார்? (1 புள்ளி)

_______________________________________________

2. இப்பாடற்பகுதி இடம்பெற்றுள்ள நூல் எது? (1 புள்ளி)

_______________________________________________

3. செங்காந்தள் எதற்கு உவமையாகக் கூறப்பெற்றுள்ளது? (1 புள்ளி)

_______________________________________________

4. அரிசிமாக் கோலம் போடப்பெற்றுள்ள இடம் எது? (1 புள்ளி)

_______________________________________________

5. கொல்லைப்புறத்தில் மலர்ந்துள்ள பூ எது? (1 புள்ளி)

_______________________________________________

6. பகலவன் கொடுத்த பரிசு எது? (1 புள்ளி)

_______________________________________________

7. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் எழுதுக. (1 புள்ளி)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

**8. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து எட்டுவரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. பனி உறை தேசத்தில் பைந்தமிழ்...
2. ஏற்றமிகு எதிர்காலம்...

(4 புள்ளிகள்)

**9. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. ஆறுமுகநாவலர் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய பணிகள்
2. வளர்முக நாடுகளில் தொழிற்கல்வி
3. இன்றைய உலகில் விளம்பரங்களினால் ஏற்படும் நன்மை தீமைகள்

(9 புள்ளிகள்)

## பகுதி - 2

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து அதனை மூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

மரங்கள் இயற்கை தந்த பெருங்கொடைகளில் மிகவும் முதன்மையானதாகும். மரங்களில் பல்வேறு வகையான இனங்கள் உலகெங்கும் பரவிக் காணப்படுகின்றன. கதிரவனின் ஒளியையும் நீரையும் காபனீரொட்சைட் வாயுவையும் கொண்டு மரங்கள் மட்டுமே உணவைத் தயாரிக்கின்றன. மனிதன் உட்பட மற்றைய எல்லா உயிரினங்களும் மரங்கள் தயாரிக்கும் உணவை மரத்திலிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உண்டு உயிர்வாழ்கின்றன. அதாவது மரங்களையும் மரங்கள் தயாரிக்கும் உணவையும் உண்டுவாழும் உயிரினங்களையும் மனிதரும் மற்றைய உயிரினங்களும் உண்டுவாழ்கின்றனர். மரங்களே உணவு உற்பத்தியின் அடித்தளமாகின்றன. இயற்கையின் சுழற்சிக்கு மரங்கள் இன்றியமையாதவை. மரங்கள் காற்று மண்டலத்திலுள்ள காபனீரொட்சைட் வாயுவை உள்ளிழுத்து உயிரினங்களின் சுவாசத்திற்கு முக்கியமான ஒட்சிசன் வாயுவை வெளிவிடுகின்றன. மரங்களே மழை வீழ்ச்சியில் பெரும்பங்காற்றுகின்றன. மரங்களை அழிப்பதால் மழைவீழ்ச்சி குன்றி மண் வறண்டுபோய் மனிதனும் ஏனைய பெரும்பாலான உயிரினங்களும் அவ்விடத்தைவிட்டே குடியகலும் துன்பநிலை பல இடங்களில் ஏற்பட்டுள்ளது.

(4 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

உணர்ச்சிகளுக்குச் சிறப்பிடம் கொடுக்கும் இலக்கியத்தில் கற்பனையும் கலையுணர்வும் கலந்து காணப்பெறும். கற்பனையுடையவர் தம்முடைய அனுபவத்தோடு மனித உணர்ச்சிகளைப் பெருக்கி கவர்ச்சியுடையதாக எடுத்துரைக்கின்றனர். அத்தகைய இலக்கியத்தில் அறிவுக்கும் கருத்துக்கும் முதலிடம் தரப்பெறுவதில்லை. மக்கள் உள்ளத்தை நெகிழ்விக்கும் ஆற்றலும் கவரும் திறனும் உடையதாகவிருப்பதால் இவற்றை ஆற்றல் இலக்கியங்கள் என்பர். சில இலக்கியங்கள் இதற்கு விதிவிலக்காக மகிழ்விப்பதோடு அறிவுறுத்துவனவாகவும் அமையும். நீதிநூல்களும் இலக்கியத்தின் ஒருவகையேயாகும். ஆனால் அவை குறிப்பிட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பெறுகின்றன. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு வழிகாட்டுவதே அவற்றின் குறிக்கோளாகும். நீதிநூல்களை இயற்றும் புலவன் முதிர்ந்த அறிவும் கனிந்த அனுபவமும் உடையவனாக இருக்கிறான். தான் எடுத்துரைக்க விரும்பும் கருத்துக்கே முதலிடம் தருகிறான். உணர்ச்சி என்பது இலக்கியத்திற்கு இன்றியமையாத ஒன்பது வகையான சுவையுணர்வுகளைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும். அறநூல்களில் ஒன்பான் சுவையுணர்ச்சிக்கு இடமில்லை என்பதைவிட அவற்றிற்கு சிறப்பிடம் தரப்பெறுவதில்லை. ஆனால் வாழும் இலக்கியமாக உள்ள திருக்குறள் போன்ற சிறந்த நீதிநூல்களில் உணர்ச்சிக்கு இடமில்லை என்று சொல்லுவது பொருந்தாது. வள்ளுவர் வீரச்சுவையையும் அவலச்சுவையையும் இன்பச்சுவையையும் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார்.

1. ஆற்றல் இலக்கியங்கள் எத்தகைய இயல்பின? (1 புள்ளி)

_______________________________________________

2. நீதிநூல்கள் இயற்றும் புலவன் எத்தன்மை வாய்ந்தவன்? (1 புள்ளி)

_______________________________________________

3. இப்பந்தியில் வாழும் இலக்கியமாகக் கூறப்பெற்றது எது? (1 புள்ளி)

_______________________________________________

4. இலக்கியத்திற்கு இன்றியமையாத சுவையுணர்வுகள் எத்தனை? (1 புள்ளி)

_______________________________________________

5. நீதிநூல்களின் குறிக்கோள் என்ன? (1 புள்ளி)

_______________________________________________

6. திருக்குறளில் இழையோடியிருக்கும் சுவையுணர்வுகள் எவை எனக் கூறப் பெற்றிருக்கின்றன? (2 புள்ளிகள்)

_______________________________________________

3. **கீழ்க்காணும் உரைப்பகுதிகளுள் உமக்குத்தெரிந்த மொழியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் தமிழாக்கத்தை எழுதுக.** (4 புள்ளிகள்)

**Deutsch**

Trincomalee befindet sich im Osten von Tamil Eelam. Hier befindet sich der, an drei Seiten von grossen Bergen umgebene, Tiefsee, wo grosse Schiffe sich am Ufer anlegen können. Dies ist ein Gebiet voller herzberaubender Orte, wie wunderschöne Strände, das mehrere hundert Jahre alte Konesar Tempel, die Kanniyai Thermalquelle oder der Taubenberg (Puramalai). 20 Kilometer nordwestlich von Trincomalee befindet sich Nilaveli. Nilaveli ist eine der Hauptattraktionen, die die Touristen, die nach Tamil Eelam gehen anzieht. In diesem Gebiet, welches voller Fruchtbäume und Kokoshaine ist, gibt es auch zahlreiche Hotels. In der Nähe vom Nilaveli Strand befindet sich ein, Taubenberg (Puramalai) genannter, schöner Ort. Dies ist kein grosses Berggebiet, sondern zwei kleine Insel, die sich ganz Nahe an diesem Strand befinden.

**Français**

Thirukonamalai est situé à l'est de l'Eelam. Le port de Thirukonamalai où les grands navires peuvent jeter leurs ancres dans la mer profonde est entouré des trois côtés par de grandes montagnes. Cette région renferme des sites spectaculaires comme de belles plages, le temple de Koneswar vieux de plusieurs centaines d'années, le « Kanniyay Vennirurru » (les sources d'eaux chaudes) ainsi que le « Pura Malai ». Nilaveli se situe à 20 km au nord-ouest de la ville de Thirukonamalai. Nilaveli est une des destinations touristiques principales qui attirent les voyageurs qui se rendent à l'Eelam. On y trouve beaucoup d'arbres fruitiers, de palmiers ainsi que de nombreuses résidences touristiques. À côté de la plage de Nilaveli, il y a un endroit très charmant appelé "Pura Malai ». Ce n'est pas une région montagneuse. Il s'agit de deux petites îles situées proche de la plage de Nilaveli.

**Italiano**

Thirukonamalai si trova a est dell'Eelam. A Thirukonamalai si trova il porto naturale più grande, qui il profondo mare dove le navi possono ancorare è circondato in tutte e tre le parti, da grandi montagne. Qua si trovano varie attrazioni spettacolari come numerose spiagge meravigliosi, il tempio koneswar che risale a centinaia di anni fa, "Kanniyay Vennirurru", " Pura Malai". Se dalla città di Tirukonamalai, si va verso nord-ovest di 20 km, si trova Nilaaveli. Per i turisti che vanno ad Eelam, Nilaaveli è un'importante attrazione turistica. Qua, dove si trovano varie piante fruttifere e palme, si trovano anche molti villaggi turistici. Di fianco al lungo mare Nilaaveli, si trova un luogo molto affascinante, chiamato Puramalai. Questa non è una regione montagnosa ma bensì due piccole isole che si trovano nelle vicinanze del lungomare.

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளி |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |